பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 14 | ஞாயிற்றுக்கிழமை | 29.12.2024 | அதிர்வு 149

## எனது பாதையில் அநுரவும் பயணம்

### ரணில் புகழாரம்



“நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி இலங்கை யின் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார 06

## தமிழரசின் பேச்சாளராகத் தொடர்ந்தும் சுமந்திரன்

### ======== பதில் தலைவர் சி.வி.கே. அறிவிப்பு ========



(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் என்று கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை 05

## அரியம் உட்படப் பலர் நீக்கம்! சிவமோகன் இடைநிறுத்தம்!!

### தமிழரசின் மத்திய குழு தீர்மானம் என்கிறார் சுமந்திரன்





(கி.வசந்தன்)

**“இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஊடாகக் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுகின்றார்கள். அதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின் சி.சிவமோகன் தமிழரசுக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.** 05

## மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளியோம்!

### அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி திட்டவட்டம்



இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்கமாட்டோம் என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“இன, மத வன்முறைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் இன, மத ரீதியிலான சில பிரச்சினைகள் இருக்கின்றமை உண்மைதான். அவற்றுக்கு நாம் தீர்வு காண்போம்.

ஆனால், அந்தப் பிரச்சினைகளை ஊதிப்பெருக்கும் வகையில் – வன்முறைகளைத் தூண்டும் வகையில் எவராயினும் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைப் போட்டடித்த மாவை சேனாதிராஜாவுக்கு கட்சியின் அரசியல் குழுத் தலைவர் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது.

2014 வரை கட்சித் தலைவராக இருந்த சம்பந்தன் அந்தப் பதவியை மாவை சேனாதிராஜாவிடம் ஒப்படைத்த போது சம்பந்தனைக் கட்சியின் ‘பெருந்தலைவராக’ சர்ச்சையின்றி கட்சியின் எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்.

அத்தோடு தலைவர் பதவியில் இருந்து இறங்கிய சம்பந்தனின் பங்களிப்பு கட்சிக்குத் தேவை என்பதைக் கருதி கட்சியின் அரசியல் விடயங்களை முடிவெடுக்கும் அரசியல் குழு தலைவர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. அதனால் – தலைவர் பதவியைத் தானாகத் துறந்து, அதனை இன்னொருவருக்கு வழங்கிய சம்பந்தன் அப்பதவியை அலங்கரிப்பதால் – அரசியல் குழுத் தலைவர் பதவி என்பதை ‘பெருந்தலைவர்’ பதவி என்று சிலர் அர்த்தப்படுத்துகின்றனர். 05



# பருத்தித்துறை உணவு கையாளும் நிலையங்களில் திடீர் சோதனை

பருத்தித்துறை நகர் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினரினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பண்டிகைக் காலத்தின் போது உணவகங்களின் தரம் மற்றும் சுகாதார நிலமைகளை அவதானிக்கும் பொருட்டு யாழ். மாவட்டத்தில் பரவலாக இச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது 18 உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் நான்கு உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது





# கல்வி முறைமையினூடாக அரசாங்கத்தின் இலக்குகளை அடைவதே பிரதான நோக்கம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய, உள்நாட்டு மற்றும் உலகளாவிய தொழிலாளர் சந்தையை பூர்த்தி செய்யும் வகையில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் நாட்டுக்கு தேவைப்படுகின்றனர் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் பயிற்சி பெற்ற டிப்ளோமாதாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு திறன்களைக் கொண்டவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் எனவும் அதற்கமைய, நாட்டின் கல்வி முறைமையினூடாக அரசாங்கத்தின் இலக்குகளை அடைவதே பிரதான நோக்கமாகும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.





# சுங்கத் திணைக்களத்தில் நடைபெறுகின்ற மோசடிகளை மட்டுப்படுத்த நடவடிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் குடிவரவு–குடியகல்வு திணைக்களம், இலங்கை சுங்கம், விமான நிலையம் , விமான சேவை நிறுவனம் ஆகியவற்றின் தலைமையதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

போதைப்பொருள்,சட்டவிரோத பொருள்கள் நாட்டிற்குள் வருவதைத் தடுத்தல், விமான நிலையம், சுங்கத் திணைக்களத்திற்குள் நடக்கும் ஊழல்,மோசடிகளை மட்டுப்படுத்தல்,சட்டவிரோதமான முறையில் நபர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பது குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதற்காக, குடிவரவு – குடியகல்வு திணைக்களம், இலங்கை சுங்கம்,விமான நிலையம்,விமான சேவை நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் இணை கமரா கட்டமைப்பு,கண்காணிப்பு நிலையத்தை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆலோசனை வழங்கினார்.

அதேபோல், தற்போதுள்ள ஸ்கேன் இயந்திரங்களுக்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட நவீன ஸ்கேன் இயந்திரங்களைப் பயன்படுத்தி இந்த நிறுவனங்கள் ஊடாக நடக்கும் கடத்தல்களை தடுப்பதற்கு நடைமுறை சாத்தியமான புதிய செயல்முறையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், நாட்டு மக்கள் மத்தியில் சுங்கம் தொடர்பில் தற்போது காணப்படும் தவறான புரிதல்கள் களையப்பட வேண்டும் எனவும், அதற்காக கடுமையான ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.









# இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் வருகை டிசம்பரில் அதிகரிப்பு

டிசம்பர் மாதத்தில் நாட்டிற்கு வருகைதந்த இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன்படி இம்மாதத்தின் முதல் 25 நாள்களில் நாட்டிற்கு வருகைதந்துள்ள இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,675 ஆக பதிவாகியுள்ளது.

முன்னதாக கடந்த நவம்பர் மாதம் 878 இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்திருந்தனர் எனபது குறிப்பிடத்தக்கது.

# சொத்து, பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்க எம்.பிக்களுக்கு காலக்கெடு



அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 (அ) பிரிவின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்று 03 மாதங்களுக் குள் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட் பாளர்களும் தங்களது கல்வித் தகைமைகளைக் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்ற வகையில் சட்டம் இயற்ற வேண் டும் என சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூறு கின்றன.

இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில் ஒவ்வொரு வேட்பாள ரும் தமது சுயவிபரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க கூடிய வகையிலான சரத்தும் உள்ளடக்கப்பட வேண்டும் என பெஃபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித் தலைமைப் பதவியை விட்டு இறங்க மாட்டேன் என்று நீண்ட காலமாக அடம் பிடித்து நிற்கும் மாவை சேனாதிராஜாவை அதிலிருந்து கழற்றி விடுவதற்காக இப்போது அரசியல் குழுத் தலைவர் பதவியை மத்திய குழு அவருக்கு வழங்க, அதனோடு சேர்த்துப் 'பெருந்தலைவர்' கிரீடம் வேறு சிலரால் அவருக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் மாவை சேனாதிராஜாவுக்கு 'பதவி உயர்வு' என்ற பெயரில் அதிகார பறிப்பு கட்சிக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. கட்சியை கையாளும் அவரின் திறமையின்மையை சமாளிப்பதற்கு கட்சியினருக்கு இதைத் தவிர வேறு வழி இல்லைப் போலும்.

2013இல் மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது கட்சியின் பொதுச்செயலாளராக மாவை சேனாதிராஜா இருந்தார். அச்சமயம் அவரை அதிகாரம் மிக்க செயலாளர் பதவியில் வைத்துக் கொண்டு, வேட்பாளர்களைத் தேர்வு செய்து நியமிப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டார் சம்பந்தன்.

அதனால் அடுத்த வருடமே கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி, கட்சித் தலைவர் பதவியை தாம் விட்டுக் கொடுக்கின்றார் எனக் காட்டி, பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தலைவர் பதவிக்கு 'புரமோஷன்' என்ற பெயரில் மாவையைத் தூக்கி அடித்தார் சம்பந்தன்.

அப்போதே, 'இது பதவி உயர்வு அல்ல, அதிகாரப் பறிப்பு' என நான் விளக்கமாக – வியாக்கியானமாக – வெளிப்படையாக விவரங்களைத் தெளிவுபடுத்தி ஒரு கட்டுரை வரைந்திருந்தேன்.

அதன் தாற்பரியத்தை – உட்கருத்தை – 2020 பொதுத்தேர்தலை அடுத்து மாவை புரிந்து கொள்ளும் சூழல் ஏற்பட்டது. அவர் கட்சியின் தலைவராக இருக்க, அவர் விரும்பி எதிர்பார்த்துக் காத்திருந்த தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் அவருக்குத் தெரியாமலேயே வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டு விட்டது.

கட்சியின் தலைவராக மாவையை உயர்த்தி விட்டு, பொதுச்செயலாளர் என்ற அதிகாரப் பதவிக்கு தம்முடைய ஆளான துரைராஜசிங்கத்தை நியமித்த தனது சாணக்கியத்தை இந்த நியமனம் மூலம் வெளிப்படுத்தினார் சம்பந்தன். அப்போதுதான் நான் முன்னர் எழுதிய கட்டுரையின் அர்த்தத்தை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தலைவர் என்ற அலங்காரப் பதவிக்கு தன்னை மாற்றி, தனது அதிகாரத்தை சம்பந்தன் வசமாகப் பிடுங்கிக் கொண்டார் என்ற உண்மையை மாவை சேனாதிராஜா உணர்ந்து கொண்டிருப்பார் என நினைக்கின்றேன்.

இப்போதும் மூத்த துணைச் செயலாளரான சுமந்திரனை வெட்டி – அல்லது அவருக்குத் தெரியாமல் – மற்றைய துணைச் செயலாளரான வைத்தியர் சத்தியலிங்கத்தைப் பொதுச்செயலாளர் பதவிக்குத் தான் நியமித்ததன் பலனை இப்போது மத்திய குழுக் கூட்டத்தில் மிக உறுதியாக நின்று செயற்பட்டு தன்னைப் பிடித்து வெளியே விட காத்திரமாக நடவடிக்கை எடுத்த சத்தியலிங்கத்திடம் அவர் படித்திருப்பார். மாவையின் வழமையான வழுவல் – நழுவல் நிர்வாகத்தை இது வரை சகித்துக் கொண்ட வைத்தியர் சத்தியலிங்கம், மாவையின் இராஜிநாமா நாடக விவகாரத்தில் மிக உறுதியாகச் செயற்பட்டு, கட்சியை மீட்டெடுக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தமை பாராட்டுக்குரியது.

தற்போது கட்சியின் தலைவர் பதவி மாவையிடமிருந்து கழற்றப்பட்டிருக்கின்றது. ஆனாலும் 'பெருந்தலைவர்' பதவி என்ற கிரீடம் அவர் தலையில் அவரின் ஆதரவாளர்கள் சிலரால் சூட்டப்பட்டிருக்கின்றது. அதிகாரமற்ற – அர்த்தமற்ற – கட்சியால் வழங்கப்படாத – அந்தப் பதவிப் பெயரை வைத்துக்கொண்டு மாவை ஆறுதல் அடைய வேண்டியதுதான்.

நேற்றுக் காலை கட்சியின் மத்திய குழு கூடியபோது வவுனியாவுக்கு வந்து பிறிதொரு இடத்தில் காத்திருந்தார் மாவை சேனாதிராஜா என்று தெரிகின்றது. கூட்டத்திலிருந்து தமக்கு அழைப்பு வந்தால் தான் போய் தலைவர் பதவியில் தொடர்வது அவர் திட்டமாக இருந்தது. கடந்த தடவை மத்திய குழு கூடிய போதும் இவ்வாறு இடையில் வந்து அவர் கூட்டத்துக்குள் நுழைந்தார் என்பது தெரிந்ததே.

ஆனால் நேற்றைய கூட்டத்தின் போக்கு தெளிவாக அவருக்கு எதிரான நிலையில் ஸ்திரமாக இருந்தது என்பது அவருக்குத் தெரிவிக்கப்பட்டமையால் அவர் கூட்டத்துக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டார்.

கொழும்பில் பெருந்தலைவர் சம்பந்தன் இருக்க, கட்சி வடக்கு – கிழக்கில் தன் பாட்டில் இயங்கியமை போல், இனி மாவை சேனாதிராஜா 'பெருந்தலைவர்' என்ற பெயரைத் தமக்குத் தாமே வைத்துக் கொண்டு, தெல்லிப்பளையில் 'அரசியல் ரெஸ்ட்' எடுக்க, கட்சி தன் பணியைப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

தமிழரசு கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் வேறும் பல திருக்கூத்துகள் நடந்தேறின. அவை குறிப்பிடத்தக்கவை.

கட்சியில் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீநேசன் எம்.பி. நேற்று மதியம் தமிழரசுக் கட்சிக் கூட்டம் மதிய இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட கையோடு கட்சியின் பேச்சாளர் போல் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அது மாத்திரமல்லாமல் அண்மைக்காலமாக தாமே கட்சியின் பேச்சாளர் என்பது போலவும், சுமந்திரன் கட்சியின் பேச்சாளராக எப்போதும் தெரிவு செய்யப்படவில்லை எனவும், சுமந்திரன் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக மட்டுமே இருந்தார் எனவும் ஸ்ரீநேசன் எம்.பி. வெளியில் பல இடங்களில் கருத்து தெரிவித்து வந்தார்.

இதனால் நேற்று மாலை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடிய போது இந்த விடயம் தொடர்பில் மத்திய குழுவின் கவனத்துக்குச் சுமந்திரன் கொண்டு வந்தார். சுமந்திரன் கட்சியின் பேச்சாளர் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தும் ஒரு அறிவுறுத்தல் கட்சியில் தீர்மானமாக முன்னெடுக்கப்பட்டது. ஸ்ரீநேசன் தேவையானால் கட்சியின் நாடாளுமன்ற குழுப் பேச்சாளராக – நாடாளுமன்றக் குழு அவரைத் தெரிவு செய்ததன் அடிப்படையில் – செயற்படலாம் என்றும் மத்திய குழு அறிவுறுத்தல் தீர்மானம் ஒன்றை எடுத்தது.

நேற்றுக் காலை மத்திய குழுவில் சி.வி.கே.சிவஞானத்தைப் பதில் தலைவராகத் தெரிவு செய்யும் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்படும் போது அங்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் பிரசன்னமாக இருந்தார். அவரையும் சேர்த்துத்தான் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மதியம் இடைவேளைக்கு பின்னர் மீண்டும் மத்திய குழு கூடிய போதுதான் அவர் (சிவமோகன்), மதிய இடைவேளைக்கு முன்னர் எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானத்தை ஆட்சேபித்துத் தாம் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்கின்றார் என்று கூறிக்கொண்டு வெளியேறினார்.

கட்சியின் பதில் தலைவராக சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தைத் தெரிவு செய்யும் அதேநேரம் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக பெருந்தலைவர் என்ற பெயரோடு மாவை சேனாதிராஜா தெரிவு செய்யப்படலாம் என்ற பிரேரணையை சுமந்திரன் முன்மொழிந்தபோது இந்த 'பெருந்தலைவர்' என்ற பெயரை அகற்றும்படி வற்புறுத்தினார் சிறீதரன் எம்.பி. கட்சி யாப்பில் இல்லாத பதவி நிலையை மத்திய குழு வழங்குவது தவறானது என்ற அவரின் நிலைப்பாடு முற்றிலும் சரியானதே. அவரது கோரிக்கையின் பேரில் அது – 'பெருந்தலைவர்' என்ற பெயர் – அகற்றப்பட்டது. ஆனால், ஸ்ரீநேசன் எம்.பியோ பின்னர் வெளியில் வந்து மாவை சேனாதிராஜாவைப் பெருந்தலைவராகத் தெரிவு செய்திருப்பதாக அறிவித்தார்.

இப்படி நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற திருக்கூத்துக்களைப் பட்டியலிட்டால் அவை நீண்டு போய்விடும். அதனால் முடித்துக்கொள்கின்றேன்.

---

## தமிழரசின் பேச்சாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உள்ளடக்கிய நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனை நியமித்துள்ளமையால் அவர் நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பார்.

எனினும், தமிழரசுக் கட்சியினுடைய ஊடகப் பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ. சுமந்திரன் செயற்படுவார்." – என்றார்.

---

## அரியம் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்சியின் உறுப்பினரான சிவமோகன் மீது தேர்தல் காலங்களில் கட்சியினுடைய வேட்பாளர்களை நேரடியாகத் தாக்கி ஊடக சந்திப்புக்களை நடத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. அரியநேத்திரன் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டிருக்கின்றார். அவரைக் கட்சியிலிருந்து விலக்கலாம் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன், கடந்த தேர்தல்களில் கட்சிக்கு எதிரான வகையில் வேறு கட்சிகளோடு அல்லது சுயேச்சைக் குழுக்களோடு இணைந்து போட்டியிட்டவர்கள் அனைவரையும் உடனடியாகக் கட்சியில் இருந்து விலக்குவதாக மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. அவ்வாறானவர்களின் பெயர்கள் எல்லாம் வர்த்தமானியில் உள்ளன.

மேலும், வேறு கட்சிகள் மற்றும் குழுக்களுக்காகப் பிரச்சாரம் செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஏனையவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார்.



# அரச அதிகாரிகளுக்கு விசேட முற்பணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

அரச அதிகாரிகளுக்கு அடுத்த ஆண்டுக்காக 4,000 ரூபாயிற்கு மிகாத விசேட முற்பணத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்கால வேதனத்தில் கழிக்கப்படும் வகையில் இந்த முற்பணத் தொகை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இந்த முற்பணம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்குள் செலுத்தப்பட உள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களினால் மேற்கொள்ளப்படும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.



# சீதுவை துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி; இருவர் காயம்

சீதுவை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

சீதுவ வெலபட வீதியில் மகிழுந்தில் வந்த அடையாளந் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நிலையில் மூவர் சிகிச்சைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

இந்த மூவரில் 53 வயதுடைய நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எனது பாதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திஸாநாயக்க எனது பாதையிலேயே பயணிக்கின்றார். அவருக்கு எனது வாழ்த்துக்கள்!" – என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் இந்தியாவிலிருந்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் முன்னெடுத்த வேலைத்திட்டங்களையும், நான் ஆரம்பிக்கவிருந்த அபிவிருத்திகளையும் முன்கொண்டு செல்ல தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திடசங்கற்பம் பூண்டுள்ளார். அதனை அவர், தனது உத்தியோகபூர்வ முதலாவது வெளிநாட்டுப் பயணமான இந்திய விஜயத்தின்போது வெளிப்படுத்தியுள்ளார்.

நாட்டின் நலன் கருதிய அநுரகுமாரவின் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்படுவார் என்றும் நான் நம்புகின்றேன்.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை முழுமையாகத் தீர வேண்டும். அபிவிருத்தி முழுமை பெற வேண்டும். அதன்பின்னர் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமாக இருக்கும்.

ஜனாதிபதி அநுரகுமார உறுதியளித்ததன் பிரகாரம் 2025ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது.

அதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் அநுரகுமார வழங்கிய சகல வாக்குறுதிகளையும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் அவர் மீது முழு நம்பிக்கை இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் ஏற்படும்." – என்றார்.

## மீண்டும் இரத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துக்களை வெளியிட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்கமாட்டோம். வேரூன்றியிருந்த தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறியதால்தான் வடக்கு – தெற்கு இடையேயான உறவு அறுந்தது. பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள். அந்த நிலைமை மீண்டும் வர இடமளியோம். புதிய அரசமைப்பின் ஊடாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்." – என்றார்.




# மார்கழி இசைவிழாவில் ஆளுநர் பங்கேற்பு


யாழ். இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல், யாழ் வணிகர் கழகம் ஆகிய இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா - 2024“ இன் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சரின் எச்சரிக்கை

சிறிய பாக்கு நீரிணைக் கடலினால் பிரிக்கப்பட்டிருக்கின்றது இலங்கையும் இந்தியாவும்.

அதனால் இந்தியாவின் தென்முனையில் உள்ள தமிழகமும் இலங்கையின் வடக்கு தமிழர் தாயகமும் மிக மிக நெருக்கமானவை.

பூலோக ரீதியில் - புவியியல் அளவீடுகளில் - நெருக்கமானவர்கள் மட்டுமல்லாமல் அரசியல், கலாசாரம், வாழ்வியல் தொடர்புகளிலும் மிக நெருக்கமானவர்கள் தமிழக தமிழர்களும் இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்களும். தொப்புள் கொடி உறவு போன்றவர்கள் இரு தரப்பினரும் என்பது பொதுவான கூற்று.

சிறிய பாக்கு நீரிணைக் கடல் பிராந்தியத்தினால் பிரிக்கப்பட்டிருக்கின்றமை காரணமாக இரண்டு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் எல்லை அத்துமீறல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கின்றது.

மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பார்கள். அதுபோல நெருக்கமான கடல் பிராந்தியத்தினால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழக - இலங்கை மீனவர்களிடையேயான ஊடாட்டமும் அத்துமீறல்களும் தவிர்க்க முடியாதவை. அதை ஒரு நாளில் தடுத்து விட முடியாது.

ஆனால் அதற்காக அந்த விவகாரத்தை ‘எடுத்தோம், கவிழ்த்தோம்’ என்ற மாதிரி நாங்கள் கையாளக் கூடாது கையாள முடியாது.

பக்கத்தில் இருக்கும் இந்திய உபகண்டத்தின் பல்வேறு அர்த்த பரிமாணங்களில் அடிப்படையில் இந்த விவகாரத்தை தந்திரோபாயமாகக் கையாள வேண்டும்.

அச்சுறுத்தும் பாணியில் இந்த விவகாரத்தை கையாள்வது கூட ஒரு தந்திரோபாயமாக அமையக் கூடும். ஆனால் அதற்கான சூழ்நிலை இப்போது ஏற்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இலங்கையின் புதிய தேசிய மக்கள் சக்தி அரசின் கடற்றொழில் அமைச்சர் இது விடயத்தில் இப்போது அதிரடி அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

“இந்திய மீனவர்களுடன் இனிப் பேச்சுவார்த்தை கிடையாது” - என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்திருக்கின்றார்.

“இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இந்திய மீனவர்களுடன் இனிப் பேச்சுவார்த்தை கிடையாது. பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டன. இனிப் பேச்சுவார்த்தை இல்லை. யாரோடும் இனிப் பேச்சுவார்த்தை இல்லை.

“மீன்பிடி அமைச்சில் உள்ள அதிகாரிகளுக்கும் இந்தியாவில் உள்ள அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. அந்தப் பேச்சுவார்த்தைகள் தொடரும். அது தொழில்நுட்ப ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பானவை.

“இதேநேரம் வேறு விதமான மனிதாபிமான உதவிகளை நாடுவதோ, கொடுப்பதோ தொடர்பில் அப்படியான ஒரு பேச்சுவார்த்தைக்கு நாங்கள் செல்லப் போவதில்லை. இதுதான் எமது மனிதாபிமான நடவடிக்கை என்று நாங்கள் கூறுகின்றோம்.” - என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

மீனவர் பிரச்சனை தொடர்பில் இந்திய மீனவர்களோடு இனிப் பேச்சுவார்த்தை இல்லை என்று குறிப்பிடும் இலங்கைக் கடற்றொழில் அமைச்சர், அதற்குப் பதிலாக இந்த விவகாரத்தைக் கையாளத் தாங்கள் என்ன வழியை நாடப் போகின்றனர், என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றனர் என்பதைக் கோடி காட்டவில்லை.

ஆயினும் இனிப் பேச்சு இல்லை என்ற கூற்று, சமரச ஏற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளியா என்பதை உறுதிப்படுத்தவில்லை.

சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு வழிகளில் தண்டம் போன்ற வழியை இனி நாடுவதுதான் ஒரே மார்க்கம் என்பதையே அமைச்சர் இப்படிக் கூறினார் என்று கருத முடியும்.

அந்த விவகாரம் வெறுமனே மீனவர் பிரச்சினை மட்டுமல்ல, முடிவில் இவற்றையெல்லாம் தாண்டி, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு நெருக்கடிகளில் ஒன்றாக இது அவதானிக்கப்பட வேண்டும். அத்தகைய விடயத்தை மிகுந்த பொறுப்புணர்வோடு தான் முன்நகர்த்த வேண்டும் என்பதை கடற்றொழில் அமைச்சருக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். தனித்து இலங்கை மீனவர்களின் - குறிப்பாக வடக்கு மீனவர்களின் - கைதட்டல்களை வாங்குவதற்கான வெற்றுப் பேச்சாக இது அமைந்து விடக்கூடாது.



# பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது

## முறைப்பாடுகள் பதிவாகின

பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெயை சுத்திகரித்து மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கும் மோசடி தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மிளகாய், மஞ்சள், மசாலா வகைகளுடன் பல்வேறு வகையான மா கலக்கப்படுவது தொடர்பிலும் தகவல் கிடைத்துள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் சமீர முத்துகுட தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தை மையமாக கொண்டு நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

அன்று முதல் நேற்று வரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் பொது சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது தரமற்ற உணவுகளை விற்பனை செய்த 450 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன என பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் பிரதம செயலாளர் சமீர முத்துகுட குறிப்பிட்டுள்ளார்.



# சலோச்சன கமகே உள்ளிட்ட 6 பேருக்கு விளக்கமறியல்

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சலோச்சன கமகே உள்ளிட்ட 6 பேர் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 90 லட்சம் ரூபா லஞ்சம் பெற்றுக் கொண்ட போது லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

டொரிங்டன் அவினியூ பகுதியில் அமைந்துள்ள காணியொன்றை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைத்த பின்னர் அந்த காணிக்கான நட்டஈடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பதிலாக சந்தேகநபர்களினால் லஞ்சம் பெறப்பட்டுள்ளது.




# இலங்கை கடன் மதிப்பீட்டை உயர்த்துவதில்லை; ஸ்டேண்டர் அண்ட் புவர்ஸ் நிறுவனம் தீர்மானம்

இலங்கையின் கடன் தர மதிப்பீட்டை உயர்த்துவதில்லை என உலகளாவிய கடன் தர நிர்ணய நிறுவனமான ஸ்டேண்டர் அண்ட் புவர்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் 175 மில்லியன் டொலர் இறையாண்மை கடன் பத்திரத்தை மறுசீரமைக்க இலங்கை அரசாங்கம் தவறியதே இதற்கு பிரதான காரணமாகும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்த பின்னர், இரண்டு சர்வதேச முதலீட்டு நிறுவனங்கள் நாட்டில் கடன் முதலீடுகளை உயர்த்த நடவடிக்கை எடுத்தன.

உலகின் முன்னணி கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்களான மூடிஸ் மற்றும் ஃபிட்ச் ரேட்டிங்ஸ், 12 பில்லியன் டொலர் மதிப்புள்ள இறையாண்மை கடன் பத்திரங்களை மறுசீரமைப்பதன் மூலம் இலங்கையின் கடன் மதிப்பீட்டை உயர்த்துவதற்கு தீர்மானித்தன.

இந்தநிலையில், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புடைய 175 மில்லியன் டொலர் இறையாண்மை கடன் பத்திரத்தை நிறைவு செய்தவுடன், நீண்ட கால வெளிநாட்டு நாணயத் திருப்பிச் செலுத்தாது அதிகரிக்கலாம் என்றும் ஸ்டேண்டர் அண்ட் புவர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



# ரின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயித்து விசேட வர்த்தமானி வெளியீடு

ரின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 425 கிராம் தகரத்தில் அடைக்கப்பட்ட டுணா மீனின் அதிகபட்ச சில்லறை விலை 380 ரூபாயாகவும், 155 கிராம் தகரத்தில் அடைக்கப்பட்ட டுணா மீனின் அதிகபட்ச சில்லறை 180 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 425கிராம் நிறையுடைய தகரத்தில் அடைக்கப்பட்ட மெக்கரல் மீனின் விலை 420 ரூபாய்க்கும், 425 கிராம் நிறையுடைய ஜக் மெக்கரல் மீனின் அதிகபட்ச சில்லறை விலை 560 ரூபாயாகவும் குறிப்பிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



# தமிழரசின் பரிதாபமும் தமிழரின் எதிர்காலமும்!



வி.எஸ்.சிவகரன்

பேரெழுச்சியோடு வெள்ளி விழாவை கொண்டாட வேண்டிய தமிழரசுக் கட்சி வழிப்போக்கர்களின் கையில் சிக்கி சின்னாபின்னமாகி கிடக்கிறது. விடுதலை அரசியலை வாக்கு வங்கி வணிகர்களிடம் எதிர்பார்க்க முடியாது. கொள்கையும், கோட்பாடும், தூரநோக்குச் சிந்தனையும், இலக்கை அடையும் தந்திரோபாயமும், மதிநுட்பமும் இல்லாத தலைவர்களால் விடுதலைக்கான பாதையை ஒருபோதும் கட்டமைக்க முடியாது. அறிவு கடந்த உணர்ச்சி அரசியல், தத்துவார்த்தக் கோட்பாட்டை நிலை நிறுத்துவதற்கு ஒருபோதும் பற்றுறுதியாக அமைந்து விடாது.

அரசியல் என்பது வார்ப்புக்களால் உருவாகும் கோர்ப்புக்கள் அல்ல. தேசிய உணர்வு என்பது மரபணுவில் இரண்டற கலந்ததும் அவற்றை வழிநடத்தக்கூடிய ஆளுமையும், உயர் பண்பும், தெளிந்த – அகண்ட – பார்வையும், சமூக நலன் சார்ந்த அற உணர்வு சிந்தனையும், மக்கள் மயப்படுத்தப்பட்ட தாராளவாத செயத்திறனும், சமூக சம நீதி பேணக் கூடிய சமத்துவ சீர்திருத்த சித்தாந்த சிந்தனையும் ஒருங்கே உள்ளவர்களால்தான் குறைந்தபட்சமேனும் இன விடுதலை அரசியல் அரங்கில் சாமானிய மக்களின் உணர்வுப்பிரதிபலிப்பாக செயலாற்றக்கூடிய வல்லாளுமை கொண்டவர்களாக மிளிர முடியும். மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியலை வெறுமனே அறிவினாலோ அல்லது பணத்தினாலோ கட்டமைத்து நின்று நிலைத்து உயர் நிலைக்கு இட்டுச் செல்ல முடியாது.

இலக்கற்ற தலைவர்களால் நல்ல தொண்டர்களை ஒருபோதும் உருவாக்க முடியாது. சந்தர்ப்பவாத சராசரி ரசிகர்களையே பின் தொடர வைக்க முடியும். அது இலக்கு நோக்கிய இலட்சிய விடுதலை அரசியலுக்கு உகந்ததாக அமையாது. காலத்தால் இடைவெளிகளை நிரப்பக் கூடியவர்கள் எல்லாம் தலைவர்களாகி விட முடியாது.இலட்சிய வேட்கைகான தலைமையை இடைவெளி நிரப்புபவர்களைக் கொண்டு கட்டமைத்து விடவும் முடியாது.

தூய நோக்கு நிலையில் உள்ள தலைவர்களை இன்றைய அரசியல் பரப்பில் காண முடியாது. அவ்விதமான குறைந்தபட்ச சிந்தனையில் உடையவர்கள் கூட இந்த அரசியல் அரங்கில் இருந்து அகன்று விடுகிறார்கள். அரசியல் என்பது பஞ்சு மெத்தை அல்ல, அது முள்முடி. இலகுவிலே யாரும் இலக்கை எட்டி விட முடியாது. அடைவு மட்டத்துக்கு இடைப்பட்ட காலத்தில் சோதனையையும், வேதனையையும், துக்கத்தையும், துயரத்தையும், வலியையும், மனப்பிறழ்வையும், தோல்வியையும், அவமானத்தையும், அயோக்கியத்தனத்தையும், போக்கிலித்தனத்தையும் எதிர்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். இந்த நிலையை கடந்தவர்களாலேதான் சற்றேனும் நிதானித்து தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். வலி தாங்குபவர்களாலேயே வழிகாட்டமுடியும்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலின் இருப்பு என்பது நலிவுறத் தொடங்கியது. விமர்சனங்களுக்கு அப்பால் சம்பந்தனுடைய தலைமைத்துவம் ஓரளவுக்கேனும் இருப்பைத் தனதாக்குவதற்கு வழி கோலியது. அவரது இறப்புக்கு பின்னர் நிலைமை இன்னும் மோசமாகியது. ஆயுதக் குழுக் கட்சிகளின் ஆரவாரம் ஒரு பக்கம். தமிழரசுக்கட்சி தனக்குள்ளேயே தலைமைத்துவ போட்டியால் நீதிமன்றத்தில் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை.

இந்தத் தேர்தலில் வடக்கில் ஏன் பாரிய பின்னடைவு ஏற்பட்டது என்பது தொடர்பாக சுயாதீனக் குழுக்களை வைத்து ஆராய்ந்து அதன் பிரகாரம் கட்சியை முன் கொண்டு செல்ல வேண்டியதே ஒரு ஜனநாயக கட்சியினுடைய மரபாகும். அது பற்றி எல்லாம் பேசாமல் முற்றிலும் செயல்படாத தலைவர் மாவை சேனாதிராஜாவை பதவி விலகியது சரியா, தவறா என இரண்டாவது தடவையாகவும் கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தமிழரசு கட்சி திண்டாடுகிறது.

75 ஆவது ஆண்டு விழாவை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டிய தருணத்தில் இரண்டாவது தடவையாகவும் நீதிமன்றப் படி ஏறி உள்ளனர்.

எனவே இரண்டு அணிகளாக கட்சிக்குள் இருந்து, நீயா?நானா? என ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இப்பொழுது அணிகள் வேறு வேறு திசையில். மீண்டும் இரண்டு நிலைகளில் அணி திரள கூடிய நிலைக்கு தமிழரசு கட்சி வந்துள்ளது. ஏனெனில் மாவை சேனாதிராஜாவை அகற்றிவிட்டு சி.வி.கே. சிவஞானத்தை அந்தப் பதவியிலே நிறுத்துவதற்கு சுமந்திரன் சார்புடையோர் முனைப்பு காட்டி வெற்றியடைந்துள்ளார். ஆனால் தமிழரசு கட்சி யாப்பு விதி ஒன்பது (ஏ) தலைவர் பதவி வெற்றிடம் ஆகும்போது

தொடர்ச்சி ▼


# தமிழரசின் பரிதாபமும் தமிழரின் எதிர்காலமும்!

தொடர்ச்சி▲

உபதலைவர் ஒருவரை எஞ்சிய காலத்துக்கு தலைவராக பணியாற்றுமாறு மத்திய செயற்குழு நியமிக்கும் எனக் கூறப்படுகிறது. ஆகவே யார் அந்த உபதலைவர்? இங்கு சிரேஷ்ட துணைத் தலைவர் எனக் குறிப்பிடப்படுகின்றது..

இறுதியாக நடைபெற்ற தமிழரசு கட்சியின் 2019 ஆம் ஆண்டு மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய குழு யாப்பை மீறியே தெரிவு செய்யப்பட்டது. அதன்படி இரண்டு சிரேஷ்ட துணைத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் ஒருவர் மட்டுமே தெரிவு செய்ய முடியும். அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா காலமாகிவிட்டமையால் இப்பொழுது ஒருவர் மட்டுமே சிரேஷ்ட துணைத் தலைவர் என்கின்ற பெயரோடு இருக்கிறார். அதைவிட ஐந்து துணைத் தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவும் உறுதிப்படுத்தாமல் கட்சி வழங்கிய அறிக்கைகளை கடமைக்காக வாங்கி கட்டி வைத்துக் கொள்வதாகத்தான் தோன்றுகின்றது.

ஜனநாயகத் தன்மையை மீறியது கட்சி மட்டுமல்ல, தேர்தல் ஆணைக்குழுவும்தான். இங்கே குற்றவாளியாக வழக்கு தொடுக்க நேரிடலாம். நேற்றைய கூட்டத்தில் இடம் பெற்ற தெரிவு என்பது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது புரியவில்லை சீ.வி.கே.சிவஞ்ஞானம் ஒரு மூத்த தமிழரசு கட்சிக்காரர் அல்லர். அதனால் தமிழரசு கட்சியின் நீண்ட கால அங்கத்தவர்களுக்கு அவர் மேல் கடுமையான வெறுப்பும் கோபமும் உண்டு. பொதுவாக கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் அவரை அதிகம் விரும்புவதில்லை. இவரை விட மாவை சேனாதிராஜா பரவாயில்லை என்கின்ற அபிப்பிராயமும் உண்டு. இவ்விதமான பின்னணி



காணப்படுகின்றனர். துணைப் பொதுச் செயலாளர் ஒருவர் மட்டுமே இருக்க முடியும். இருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். சுமந்திரன், சத்தியலிங்கம். இதில் யார் உண்மையான துணை பொது செயலாளர் என்பது கேள்விக்குரியதே. அதில் ஒருவர் இடைக்கால பொதுச் செயலாளர் ஆகிவிட்டார். மற்றவர் இப்பொழுது தன்னை துணை பொது செயலாளர் என விழிக்கிறார். யாப்பு நிர்ணயத்தின் படி நோக்குகின்ற போது பொதுச்செயலாளர் விடயமும் கேள்விக்குட்பட்டதே. இதன் அடிப்படையை ஆராய்கின்ற போது 2019 தெரிவு செய்யப்பட்ட மத்திய குழுவும் சட்ட விரோதமானது என நீதிமன்றத்திற்கு யாராவது ஒருவர் வழக்கு தொடுத்தால் இதுவரை காலமும் கட்சியினுடைய செயல்பாடு சட்டவிரோதமானது என நீதிமன்றம் கூறினால் இவர்கள் அனைவரும் வகிக்கும் பதவிகளின் எதிர்காலம் என்ன? இதில் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தில் பதிவேற்றப்பட்ட யாப்பின்படி, கட்சி மாநாடு நடைபெறவில்லை, உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெறவில்லை என்பதனை யில் சிறிதரன் தரப்பு மாவையை அகற்றி விட்டால், சிவஞானம் சுமந்திரனுடைய ஆள் என்பதனால் அந்த அணியிடம் கட்சி போய்விடும் எனச் சிந்திக்கின்றது எனத் தெரிகிறது. அதனால் கட்சி அழிவடைந்து மக்கள் மத்தியில் வெறுப்பு ஏற்படலாம். கடந்த காலத்தில் வடக்கில் ஏற்பட்ட நிலைமை எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு முழுவதிலும் ஏற்படலாம். நம்பிய ஒருவரை நம்பாமல் விடுவது என்பது இரட்டை படுகொலைக்கு ஒப்பானது என்கிறது ரசிய பழமொழி ஒன்று. இப்படித்தான் தமிழரசு கட்சியையும் தேர்தலில் எல்லோரும் கை கழுவி இருக்கிறார்கள் போல் தெரிகிறது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது இப்பொழுது நகைச்சுவையாகிவிட்டது. அதுவும் தமிழரசு கட்சியின் அரசியல் மிக மோசமான நம்பிக்கையீனமே மக்கள் மத்தியில் உள்ளது. உட்கட்சி மோதலால் மக்கள் வெறுப்படைந்து வரும் நிலையில் உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்களிலும் தமிழரசு கட்சிக்கு

தொடர்ச்சி▼

# தமிழரசின் பரிதாபமும் தமிழரின் எதிர்காலமும்!

தொடர்ச்சி▲

எதிராக வாக்களிக்க கூடிய நிலை தோன்றலாம்.

அரசியல் என்பது சந்தர்ப்பத்துக்கு ஏற்றது போல் அணிமாறுவது, நடைமுறையை மாற்றிக் கொள்வதும் தான் என்பது போல் மாவை சேனாதிராஜாவால் வலிந்து யாப்பை மீறி பதவிக்கு கொண்டு வந்தவர்களே இன்று அவருக்கு எதிராக கங்கண கட்டி நின்று பதவியைப் பெற்றிருக்கிறார்கள். பரிதாபத்துக்குரிய நிலையில் மாவை சேனாதிராஜா. நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? துரோகிகள் யார்? – எனத் தெரியாமல் தனக்கு துரோகம் செய்யக்கூடியவர்களை நம்பி இன்று நடுத்தெருவுக்கு வந்திருக்கிறார். அவர் அதிகம் நம்பியவர்களே அவரின் இன்றைய நிலைக்கு காரணமாகி விட்டார்கள். தன்னை நம்பியவர்களை புறம் ஒதுக்கிய மாவை சேனாதிராஜாவுக்கு தான் நம்பியவர்களால் கேடு விளைந்திருக்கிறது. இதுதான் அரசியல் என்பதை இனியாவது மாவை புரிந்து கொள்ள வேண்டும். இனி புரிந்து என்ன? புரியாமல் விட்டு என்ன? கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு?

நேற்றைய மத்திய குழு கூட்டமும் புதிய தலைவர் தெரியும் கண்ணதாசனின் எதிர் வீட்டுக்காரன் கவிதை எழுதியது போல. இன்னும் ஒரு தத்துவார்த்தமான கதை உண்டு அதையே ஞாபகப்படுத்தியது கட்சியினுடைய இந்த நிலைப்பாடு சம்பந்தமாக பேசிய தமிழரசு கட்சியின் மிக மூத்த உறுப்பினர் மனம் நொந்து கூறினார். இதைவிட இந்த கட்சியை கலைத்திருக்கலாம். இந்த நிலைமைகள் ஆரோக்கியமாக நகரக்கூடிய வாய்ப்பு இல்லை.

தனக்கு இஷ்டமானவர்களை சுமந்திரன் யாழ் தேர்தல் தொகுதியிலே தேர்தலுக்கு நிறுத்தி தோல்வி அடைந்தமை போல் இப்பொழுது வழிப்போக்கர்களின் கூடாரமாக உள்ள தமிழரசு கட்சியும் எதிர்காலத்தில் மிளிர முடியுமா என்கின்ற கேள்வி உண்டு.

இந்த விடயங்களை சிறிதரன் தரப்பு எப்படி அணுகுகிறதோ தெரியவில்லை. வழக்குகள் முடிவுற்று அடுத்த தலைவர் தெரிவிலும் பாரிய பின்னடைவை சிறிதரன் சந்திக்க நேரிடலாம். அவர் இனிமேல் தலைமைப் பதவிக்கு வருவது என்பது குதிரைக்கொம்பாகவே அமையக்கூடியதாக உள்ளது.

இந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு விதமான காய் நகர்த்தல்கள் எல்லாம் இடம்பெறும். அது சிறிதரன் தலைமையை நோக்கி நகர்வதை தடுப்பதாகவே அமையும். மக்கள் மத்தியிலே தமிழ் தேசியக் கட்சிகள் மீது உள்ள கூட்டு கோபத்தின் வெளிப்பாடு தமிழரசு கட்சிக்காரர்களின் இந்த கோமாளித்தனமான – அலங்கோலமான – செயல்பாடு மூலம் அவர்களை மேலும் விசனமடைய வைக்கும். ஏனைய தமிழ் கட்சிகள் தமிழ் மக்களில் இருந்து பெரும்பாலும் காலாவதியாகிவிட்ட சூழலில் தமிழரசு கட்சியும் அந்த காலாவதி நிலையை நோக்கி நகர்கிறதா என்கின்ற கேள்வி இப்பொழுது எழுகிறது.

கடந்த தேர்தலோடு வடக்கில் காலாவதியாவதற்கான காலம் தொடங்கியது. அது கிழக்குக்கும் வியாபிக்காமல் இருப்பதற்கு கிழக்கில் உள்ளவர்கள் விழித்துக் கொள்ளாவிட்டால் தமிழ்த் தேசியத்தை இனி செவ்வாய் கிரகத்தில் தான் தேட வேண்டிய நிலை ஏற்படும்.

தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என விமர்சனம் செய்வதோ கோபிப்பதோ என்பது முற்றிலும் பொருத்தமற்றது. அவர்கள் புதிய மீட்பர்களை நோக்கி நகர்வதை தவிர வேறு என்ன வழி இருக்கப் போகிறது? 15 ஆண்டுகளாக தலைவர்களைத் தேடும் தமிழ் மக்கள் பரிதாபகரமான நிலையில், வருபவர்கள், போவர்கள் எல்லாம் அவர்களை ஏமாளி ஆக்கிவிட்டுப் போகிறார்கள் என்பதே நிலைமை. தமிழ் வாக்காளர்களுக்கு காலம் ஒரு நல்ல தலைமையை விரைவில் காட்டும் என நம்புவோமாக....!




# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்

## இந்தியாவில் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



இந்திய-இலங்கைமீனவர்பிரச்சினைகளை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிக்காக தமிழகம் சென்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று சனிக்கிழமை இராமநாதபுரத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய, இலங்கை இரு நாட்டு பிரச்சினைகளில் பல்வேறு முக்கிய முடிவுகளை எடுத்துள்ளதுடன், இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றியவர் அவரது மறைவிற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய-இலங்கைமீனவர்பிரச்சினைகளை இரு நாட்டு மீனவர்களும், இரு நாட்டு அரசுகளும் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும். சமீபத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்திய வருகையின் போது பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசுகையில் மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் என தெரிவித்திருந்தார். அது விரைவில் நடக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

கொரோனா பெருந்தொற்று காலத்திலும், இலங்கையில் ஏற்ற பொருளாதார நெருக்கடி காலத்தில் இந்திய மற்றும் சீன அரசுகள் இலங்கைக்கு பெரும் தொகையை நிதியாக அளித்ததால் இன்று இலங்கை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகிறது. எனவே இரு நாடுகளுடன் இலங்கை தொடர்ந்து நட்புடன் இருந்து வருகிறது.

இலங்கையில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் மற்றும் மாகாண தேர்தல்களில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கூட்டணி நிலைப்பாட்டை கட்சி முக்கிய தலைவருடன் பேசி விரைவில் அறிவிக்கும்.” - என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீன், இராமநாதபுரம் எம்.பி. நவாஸ்கனி ஆகியோர் உடனிருந்தனர்.

# மன்மோகன் சிங்கை அரசு அவமதித்துவிட்டது

## இறுதி சடங்கு விவகாரத்தில் ராகுல் குற்றச்சாட்டு




மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்குக்கு இடம் ஒதுக்காமல், நிகம்போத் காட் எரியூட்டுத் தலத்தில் நிகழ்த்த வேண்டிய நிலையை உருவாக்கியதன் மூலம் அரசு அவரை முற்றிலுமாக அவமதித்துவிட்டது என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“இந்திய அன்னையின் மகத்தான புதல்வரும், சீக்கிய சமூகத்தின் முதல் பிரதமருமான டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்குகளை நிகம்போத் காட்டில் நிகழ்த்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியதன் மூலம் தற்போதைய அரசு அவரை முற்றிலும் அவமதித்துள்ளது. அவர் 10 ஆண்டு காலம் இந்தியாவின் பிரதமராக இருந்தவர். அவரது பதவிக் காலத்தில் நாடு பொருளாதார வல்லரசாக மாறியது. அவரது கொள்கைகள் இன்னும் நாட்டின் ஏழை மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஆதரவாக உள்ளன.

இதுவரை, அனைத்து முன்னாள் பிரதமர்களின் கண்ணியத்துக்கு மதிப்பளித்து, அவர்களின் இறுதிச் சடங்குகள் அங்கீகரிக்கப்பட்ட நினைவிடங்களில் நடத்தப்பட்டன. இதனால் ஒவ்வொரு நபரும் எந்தவித சிரமமும் இன்றி அஞ்சலி செலுத்தினர். டாக்டர். மன்மோகன் சிங் நமது உயரிய மரியாதைக்கும் தனி நினைவிடத்துக்கும் தகுதியானவர். தேசத்தின் இந்த மகத்தான மகனுக்கும் அவரது புகழ்பெற்ற சமூகத்துக்கும் அரசு மரியாதை காட்டியிருக்க வேண்டும்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.

மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்குக்கு இடம் ஒதுக்காததன் மூலம் அரசு தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்திவிட்டதாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும், ராஜஸ்தான் முன்னாள் முதல்வருமான அசோக் கெலாட் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“டாக்டர் மன்மோகன் சிங் போன்ற ஒரு சிறந்த ஆளுமையின் தகனம் மற்றும் நினைவிடம் தொடர்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் தேவையற்ற சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு நாட்டு மக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அதன்பின், மக்களின் உணர்வுகளின் அழுத்தத்தால், பா.ஜ.க. அரசு நினைவிடம் கட்ட எதிர்காலத்தில் இடம் ஒதுக்கப்படும் என அறிவித்தது. மரியாதைக்குரிய ஒரு நபரின் தகனத்தை எந்த விசேஷ இடத்திலும் நடத்தாமல் நிகாம் போத் மயானத்தில் இந்திய அரசு நடத்துகிறது.

2010 இல், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் பைரோன் சிங் ஷெகாவத் இறந்தபோது, பா.ஜ.கவின் கோரிக்கை இன்றி, காங்கிரஸ் அரசு, அவரது குடும்பத்தினரிடம் பேசி, ஜெய்ப்பூரில் அவரது இறுதிச் சடங்குகளுக்காக உடனடியாக ஒரு சிறப்பு இடத்தை ஒதுக்கி, அங்கு நினைவிடம் கட்டப்பட்டது. 2012 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் பால் தாக்கரேவின் மரணத்துக்குப் பிறகு, காங்கிரஸ் அரசு அவரது இறுதிச் சடங்குகளுக்காக மும்பை சிவாஜி பூங்காவில் ஒரு சிறப்பு இடத்தை ஒதுக்கியது. அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் காங்கிரஸ் எப்போதும் மரியாதையுடன் விடை அளித்துள்ளது. ஆனால், மன்மோகன் சிங் விஷயத்தில் பா.ஜ.கவின் இத்தகைய நடத்தை துரதிருஷ்டவசமானது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானின் பல பகுதிகளில் ஆப்கானிஸ்தான் பதிலடி தாக்குதல்



பாகிஸ்தான் படைகள் கடந்த வாரம் நடத்திய தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் பெண்கள், குழந்தைகள் உள்பட 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், அதற்கு பதிலடி கொடுத்துள்ளதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று சனிக்கிழமை எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை ஒருங்கிணைத்த தீங்கிழைக்கும் சக்திகள், அவர்களின் ஆதரவு மையங்கள் மற்றும் மறைவிடங்களாக செயல்பட்ட புள்ளிகள் ஆகியவற்றை ஆப்கன் படைகள் குறிவைத்தன.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், ஆப்கானிஸ்தானின் இந்த தாக்குதலில் பாகிஸ்தானுக்கு நேர்ந்த உயிரிழப்புகள் மற்றம் சேதங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

முன்னதாக, எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த தலிபான்கள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டிய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானின் கிழக்கு பாக்டிகா மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களின் பயிற்சி மையத்தை குறிவைத்து கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியது. இதில், பெண்கள், குழந்தைகள் உள்பட 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஊடுருவல் தொடர்பான பாகிஸ்தானின் குற்றச்சாட்டை தலிபான் அரசாங்கம் மறுத்தது. தங்கள் மண்ணில் இருந்து எந்த நாட்டுக்கும் எதிராக தாக்குதல் நடத்த யாரையும் அனுமதிப்பதில்லை என்று அந்நாட்டு அரசு கூறியது. இதன் தொடர்ச்சியாக, தற்போது பாகிஸ்தானுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் தாக்குதல் நடத்தி உள்ளது.

கடந்த 2021, ஒகஸ்ட்டில் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது, தாலிபான்களுடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தார். புதிய தலிபான் அரசுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு சர்வதேச அரங்குகளில் பரிந்து பேசியது.

தலிபான்கள் அதிகாரத்துக்கு வருவது ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கும் என்றும், இப்பிராந்தியம் சர்வதேச முக்கியத்துவத்தைப் பெறும் என்றும் அப்போதைய பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது கூறினார்.

அந்த நேரத்தில் பாகிஸ்தானின் பிரதமராக இருந்த இம்ரான் கான், தலிபான்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது என்பது ஆப்கானியர்கள் அடிமைத்தனத்தின் தளைகளை உடைத்ததற்கு சமம் என்று கூறினார். இரு நாடுகளும் நட்பு பாராட்டி வந்த நிலையில், தற்போது எதிரெதிர் நிலைகளை எடுத்திருப்பது ஆப்கன் – பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

# உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியிருந்த எப்–16 விமானத்தை சுட்டுவீழ்த்திய ரஷ்யா

உக்ரைன் போரில் பயன்படுத்தவென அமெரிக்கா வழங்கிய அதிநவீன எப்16 விமானத்தை சுட்டுவீழ்த்தியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய அதிகாரிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவிக்கையில், ஸபோரிஷியா பகுதியில் பறந்துகொண்டிருந்த எப்–16 விமானமொன்று ரஷ்யாவால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ள ரஷ்ய நிலை மீது தாக்குதல் நடத்த ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது அந்த விமானம் அழிக்கப்பட்டது என்று கூறினர்.



இந்தத் தகவல் உறுதி செய்யப்பட்டால், உக்ரைன் இழந்துள்ள இரண்டாவது எப்–16 போர் விமானம் இதுவாகும்.

முன்னதாக, ரஷ்யாவுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகள் வழங்கிய எப்–16 விமானங்களில் ஒன்று, கடந்த ஒகஸ்ட் மாதம் ரஷ்யா நடத்திய தீவிர ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலின் போது விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த விமானி உயிரிழந்தார்.

எனினும் அந்த விமானம் விழுந்து நொறுங்கியதற்கு ரஷ்ய ஏவுகணை காரணமல்ல என்று உக்ரைன் தெரிவித்திருந்தது.

தற்போது உக்ரைனின் எப்–16 விமானத்தை தாங்களே சுட்டுவீழ்த்தியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.12.2024




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இருப்பினும் மேற்கொண்டு செல்வதற்கு சில உந்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்று உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும்.

பணியிடத்தில் பொறுமை தேவை. பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கடினமாக உழைக்க வேண்டும்.

நல்லுறவை ஏற்படுத்த துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறை மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன்கள் வாங்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நம்பிக்கை மனப்பான்மை ஆரோக்கியத்தை தக்க வைக்கும்.




இன்று நிலுவையில் உள்ள பணிகளை செய்வதற்கு உந்துதல் கிடைக்கும். உங்கள் முயற்சி மூலம் இன்றைய நாளை வளமாக்கலாம்.

நீங்கள் செய்யும் பணி உங்களுக்குத் திருப்தி அளிக்கும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையை நீங்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கி யிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் திருப்தி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்றைய நாள் மிதமான பலன்களைத் தரும். யதார்த்தமான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல பலன்களைக் காணலாம். எதிர்மறை எண்ணங்களை கைவிடுங்கள்.

பணியிடத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். இதனை சமாளிக்க நீங்கள் திட்டமிட வேண்டும். சிறப்பான முறையில் தகவல்களைப் பரிமாற்ற வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பேண எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.




ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். இதனால் நற்பலன்கள் கிடைக்கும். எளிதில் உணர்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்துவிடுங்கள். இன்று முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

பணியில் கவனம் செலுத்துங்கள். கவனச் சிதறலால் தவறுகள் ஏற்படும்.

உறவின் நல்லிணக்கத்தை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் மகிழ்ச்சி கெட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் ஆடம்பர செலவுகளை விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஜீரணக் கோளாறு, தோள் வலி போன்ற உபாதைகள் ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியமாக உணரலாம்.




இன்று வெற்றி பெறுவதற்கு யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலாது. பணிகளைக் கையாளும் போது தவறுகள் நேராத வண்ணம் கவனம் தேவை.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையால் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகை அறிய வேண்டும்.

தொண்டை பாதிப்புகளுக்கு ஆளாக நேரலாம். கண்களில் எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கண் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று உற்சாகமான நாள். இன்றைய நாளை திருப்தியுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணிச்சூழல் ஆக்கப்பூர்வமான பலன்களைத் தரும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

உங்களின் சகஜமான அணுகுமுறை மூலம் உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. பணத்தை சேமிக்கும் நல்ல சூழ்நிலை காணப்படுகின்றது.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொடர்ச்சியான தியானப் பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். புதிய நண்பர்கள் மற்றும் புதிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் பணிக்கு நல்ல கருத்துக் கணிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு வலுப்படும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பக்திப் பாடல்கள், ஸ்லோகங்கள் கேட்பதன் மூலம் இன்னும் ஆரோக்கியமாக இருக்கலாம்.




உங்கள் செயல்களை ஆற்றும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்கக் கூடாது.

பணியிடத்தில் நல்ல பலன்களைப் பெற அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சிறந்த பணி நடைமுறைகளை உருவாக்கி உங்கள் திறமைகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

உங்கள் துணையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக காணப்படாது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று நீங்கள் எளிதில் சோர்வடைவீர்கள். தோல் ஒவ்வாமையிலிருந்து தப்பிக்க எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.12.2024




இன்று சுமாரான நாள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உறுதியுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் பதட்டமான நிலை காணப்படும். பணிச்சுமையை சமாளிக்க சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிக்க விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமானதாக இல்லை. உங்கள்ளல் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

பதற்றப்படாமல் இருங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் சாதகமான நாள். இன்று கூடுதல் பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு திட்டமிடலாம்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். யோகா பயிற்சி சிறந்த பலனைத் தரும்.




உங்கள் முயற்சியில் வெற்றி பெற உகந்த நாள். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவு காணப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். கவனக் குறைவாக இருந்தால் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே நகைச்சுவையுடன் கூடிய அணுகுமுறை திருப்தியை அளிக்கும்.

உங்கள் கீழ் பணி புரிபவர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை கவனமுடன் கையாள வேண்டும்.

நட்பான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் இருவரும் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம். நல்லுறவுக்கு இது மிகவும் அவசியம்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் கண்களை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தியானப் பயிற்சி மூலம் அமைதி பெறலாம்.

